கூடுதல் மாவட்ட நீதிமன்றம், (விரைவு நீதிமன்றம்), தென்காசி.
முன்னிலை :- திருமதி கோ.அனுராதா, L.L.M., M.L.S.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.
2021-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 10ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.194/2020**

திருநெல்வேலி மாவட்டமாக இருந்து தற்போது தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டம், சிவகிரி கிராமம், கஸ்பா டவுண் 51/1, சந்தைபேட்டை ”டைனமிக்ஸ்” இல்லத்தில் வசிக்கும் சூசை குமாரர், இந்து வயது 49 உள்ள ரவி.

. . . வாதி

- எதிர் -

1. திருநெல்வேலி மாவட்டமாக இருந்து தற்போது தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டம், விஸ்வநாதபேரி கிராமம், கஸ்பா டவுண் நாயுடு தென்வடல் தெருவில் வசிக்கும் லேட் குமரேசன் மனைவி இந்து வயது 44 உள்ள லதா.
2. திருநெல்வேலி மாவட்டமாக இருந்து தற்போது தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டம், விஸ்வநாதபேரி கிராமம், கஸ்பா டவுண் நாயுடு தென்வடல் தெருவில் வசிக்கும் லேட் குமரேசன் குமாரர் இந்து வயது 22 உள்ள அய்யாச்சாமி.
3. திருநெல்வேலி மாவட்டமாக இருந்து தற்போது தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டம், விஸ்வநாதபேரி கிராமம், கஸ்பா டவுண் நாயுடு தென்வடல் தெருவில் வசிக்கும் லேட் குமரேசன் குமாரர் இந்து வயது 21 உள்ள இராஜராம்.
4. திருநெல்வேலி மாவட்டமாக இருந்து தற்போது தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டம், விஸ்வநாதபேரி கிராமம், கஸ்பா டவுண் நாயுடு தென்வடல் தெருவில் வசிக்கும் லேட் குமரேசன் குமாரர் இந்து வயது 25 உள்ள கிருஷ்ணமூர்த்தி.

. . . பிரதிவாதிகள்

இவ்வழக்கானது வாதி தரப்பில் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 1 மற்றும் பிரிவு 151-ன் கீழ் வாதிக்கு இவ்வழக்கு பிரதிவாதிகளிடமிருந்து இதன் தொகை விபரத்தில் கண்ட ரூ.25,44,900/-மும், மேற்படி அசல் கடன் தொகையான ரூ.15,00,000/-க்கு இவ்வழக்கு தேதி முதல் பின்வட்டியும், பின் செலவும் மற்றும் இவ்வழக்கு செலவும் செலுத்தும் படிக்கும் தவறும் பட்சத்தில் இவ்வழக்கு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட அடமான சொத்துக்களை ஏலத்திற்கு கொண்டு வந்து மேற்படி தொகையை வசூல் செய்யும் விதத்தில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும் படிக்கும் மேற்படி தொகை காணாத பட்சத்தில் இவ்வழக்கு பிரதிவாதிகள் மீது ஒரு தனிப்பட்ட நிலையில் தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும், இவ்வழக்கின் செலவுத்தொகை இவ்வழக்கு பிரதிவாதிகளிடமிருந்து வாதிக்கு கிடைக்க

வேண்டி 21.09.2020 அன்று மாண்புமிகு திருநெல்வேலி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, பின்னர் விசாரணைக்காக இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 03.11.2020 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கலான நாள் | : | 21.09.2020, 12.10.2020 தேதியில் மாண்புமிகு திருநெல்வேலி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 29.10.2020 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு,விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 03.11.2020அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. |
| வழக்கு மூலம் | : | 22.01.2016, 20.08.2020, 27.08.2020 ஆகிய தேதிகளில் சிவகிரி கஸ்பாவில் வைத்து உற்பத்தி. |
| வழக்கு மதிப்பு | : | ரூ.25,44,900/- |

நீதிமன்ற முத்திரைக்கட்டணம் : தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்கட்டணச் சட்டம் பிரிவு 33(1)-ன் படி ரூ.76,347/- செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 27.07.2021 அன்று இந்த நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு எம்.கருப்பசாமி, பி.எ.,பி.எல்., திரு ஆர்.முத்துபாண்டி, பி.எ.,பி.எல்,, திரு ஆர்.செல்வம்., பி.எ.,பி.எல்., ஆகியோர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், அழைத்தும் ஆஜராகாததாலும், எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், பிரதிவாதியைப் பொறுத்து ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## முதல் நிலைத் தீர்ப்பாணை

வாதிக்கு வழக்குரையில் குறிப்பிட்டிருக்கிற அடமானத்தின் மீது அசலுக்காக கொடுபடவேண்டிய பிராது தேதியான 21.09.2020ம் தேதிவரை கணக்கிடப்பட்ட தொகை அசல் ரூ.15,00,000/-ம் என்றும், அதற்கான வட்டித் தொகை ரூ10,44,900/-என்றும், அடமானப் பிணையச் சொத்தைப் பொறுத்து

வாதியால் முறையாகச் செலவிடப்பட்ட (உரிமை வழக்கின் செலவுத் தொகைகள் அல்லாத) செலவுத் தொகைகள் கட்டணங்களின் செலவுகள் ஆகியவற்றுடன் அவற்றின் மீதான வட்டி சேர்த்து ரூ.25,44,900/-என்றும், வாதிக்கு தீர்ப்பளிக்கப்பட்ட இந்த உரிமை வழக்கின் செலவுத் தொகைகள் ரூ.76,357/- (வாதிக்குரியது) என்றும், ஆக மொத்தம் ரூ.26,21,257/- என்றும் இதன் மூலம் விளம்பப்படுகிறது.

2. மேலும் இதன் மூலம் பின்வருமாறு கட்டளையிடப்பட்டு தீர்ப்பாணை செய்யப்படுகிறது.

அ) எதிர்வாதி 10.10.2021-ம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ அல்லது நீதிமன்றத்தால் தொகை செலுத்துவதற்கு எந்த தேதிவரை வேறு காலம் நீட்டிக்கப்படலாகுமோ அந்த பிந்தைய தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ நீதிமன்றத்தில் மேற்சொன்ன ரூ.26,21,257/-ஐயும், அசல் தொகை ரூ.15,00,000/-க்கு பிராது தேதி 21.09.2020-முதல் தொகை வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியுடன் சேர்த்து 10.10.2021-க்குள் செலுத்த வேண்டும் என்றும்,

ஆ) அவ்வாறு செலுத்தப்பட்டதன் பேரிலும் அதன் பின்பு நீதிமன்றம் நிர்ணயிக்கலாகும் தேதிக்கு முன்பு உரிமை வழக்கின் அத்தகைய செலவுத் தொகைகளைப் பொறுத்து நீதிமன்றம் நீதிமுறையில் தீர்மானிக்கலாகும் தொகையையும் 1908-ம் ஆண்டு உரிமை வழக்கு விசாரணை முறைச் சட்டத்தின் முதலாவது இணைப்புப் பட்டியலின் XXXIV-ஆவது கட்டளையின் 11-ஆவது விதியின் படி செல்லத்தக்கதாகும் பிந்திய வட்டியுடன் சேர்த்து 10-ஆவது விதியின் படி செலுத்தத்தக்கவையாகும் செலவுத்தொகைகள், கட்டணங்கள் மற்றும் செலவுகளை நீதிமன்றம் நிர்ணயிக்கலாகும் தேதிக்கு முன்பு செலுத்தப்படுவதின் பேரிலும், வாதி வழக்குரையில் குறிப்பிடப்பட்ட அடமானம் வைக்கப்பட்ட சொத்து சம்மந்தமான தம்வசம் அல்லது அதிகாரத்தில் இருக்கும் பத்திரங்கள் அனைத்தையும் நீதிமன்றத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும். மேலும், அத்தகைய பத்திரங்கள் அனைத்தும், எதிர்வாதியிடம் அல்லது அவர் நியமிக்கும் ஆளிடம் ஒப்புவிக்கப்படுதல் வேண்டும், மற்றும் வாதி அவ்வாறு கோரப்படுவாரானால் அந்தச் சொத்தினை மேற்சொன்ன

அடமானத்தினின்றும் விடுவித்து, வாதியினால் அல்லது அவர் வழியாக பாத்தியதை கோருகிற ஆள் எவராலும் அல்லது எவர் மூலமாக வாதி பாத்தியதை கோருகிறாரோ அவரால் உண்டாக்கப்பட்ட எல்லா வில்லங்கங்களையும் அவற்றிலிருந்தும் விடுவித்து திரும்ப தருதல் அல்லது திரும்ப உரிமை மாற்றி தருதல் வேண்டும் மற்றும் அவ்வாறு கோரப்பட்டால், எதிர்வாதிக்கு மேற்சொன்ன சொத்தின் அமைதியான மற்றும் தொந்தரவற்ற சுவாதீனத்தை ஒப்புவித்து விடுதல் வேண்டும்.

இ) மற்றும் மேற்சொல்லப்பட்டவாறு செலுத்தத் தவறுகையில் வாதி அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விற்பனைக்கான இறுதி நிலைத் தீர்ப்பாணைக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்றும், அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுவதன் பேரில் அடமானம் வைக்கப்பட்ட சொத்து அல்லது அதன் போதுமானதொரு பகுதி விற்கப்பட உத்தரவிடப்படுதல் வேண்டுமென்றும், மற்றும் அத்தகைய விற்பனையின் பொருட்டு வாதி நீதிமன்றத்தின் அல்லது அது நியமிக்கும் அலுவரின் முன்பு அடமானம் வைக்கப்பட்ட சொத்து சம்மந்தமாக அவர் வசம் அல்லது அதிகாரத்திலுள்ள எல்லாபத்திரங்களையும் ஆஜர்படுத்த வேண்டுமென்றும், இதன்மூலம் மேற்கொண்டு கட்டளையிடப்பட்டு தீர்ப்பாணை செய்யப்படுகின்றது.

ஈ) மேலும், அத்தகைய விற்பனையின் மூலம் பெறப்பட்ட பணம் நீதிமன்றத்தில் செலுத்தப்படுதல் வேண்டுமென்றும், இந்த தீர்ப்பாணையின் படியும் இந்த உரிமை வழக்கில் பிறப்பிக்கப்படலாகும் மேற்கண்ட கட்டளைகள் எவற்றின் படியும் வாதிக்கு செலுத்தத்தக்க தொகையைச் செலுத்துவதிலும் உரிமை வழக்கின் அத்தகைய செலவுத்தொகைகள் பொறுத்தும் 1908-ம் ஆண்டு உரிமை வழக்கு விசாரணை முறைச் சட்டத்தின் முதலாவது இணைப்புப் பட்டியலின் XXXIV-ஆவது கட்டளையின் 11-ஆவது விதியின் படி செலுத்தத் தக்கதாகலாம் பிந்திய வட்டியுடன் சேர்த்து 10-ஆவது விதியின் படி செலுத்தத்தக்கவையாகலாம் செலவுத் தொகைகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் பொறுத்தும் வாதிக்கு கொடுபட வேண்டியதாக நீதிமன்றம் நீதிமுறையில் தீர்மானிக்கலாகும் தொகை எதையும் செலுத்துவதிலும்,

(விற்பனைக்கான செலவுகளை அதிலிருந்து கழித்த பின்பு) ஈடுபடுத்தப்படுதல் வேண்டுமென்றும் மீதி, ஏதேனுமிருப்பின், அது எதிர்வாதியிடம் அல்லது அதனைப் பெறுவதற்கு உரிமையுடைய வேறு ஆட்களிடம் செலுத்தப்படுதல் வேண்டுமென்றும். இதன் மூலம் கட்டளையிடப்பட்டுத் தீர்ப்பாணை செய்யப்படுகிறது.

உ) மற்றும் மேற்சொல்லப்பட்டவாறு வாதிக்கு செலுத்தத்தக்க தொகை முழுவதையும் செலுத்துவதற்கு அத்தகைய விற்பனை மூலம் பெறப்பட்ட பணம் போதுமானதாக இல்லாதிருந்தால் வாதி (அவரது அடமான சரத்துக்களின்படி அத்தகைய பரிகாரம் அவருக்கு இருக்கிறவிடத்து மற்றும் அவ்வப்போது அமலில் உள்ள சட்டம் எதனாலும் தடை செய்யப்பட்டிராதிருக்கிறவிடத்து) மீதித்தொகைக்காக எதிர்வாதிக்கு எதிராக ஆள் மீது நிறைவேற்றக்கூடிய தீர்ப்பாணைக்காக விண்ணப்பிக்க உரிமையுடையவராவார் என்றும், தரப்பினர்கள் அப்போதைக்கு அப்போது காரணம் பெற்றிருக்கக் கூடியவாறு நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கச் சுதந்திர முடையவராவர் என்றும், அத்தகைய விண்ணப்பத்தின் பேரில் அல்லது மற்றபடியாக நீதிமன்றம் அது தக்கதெனக் கருதும் உத்தரவுகளை இடலாம் என்றும் இதன் மூலம் மேற்கொண்டு கட்டளையிடப்பட்டுத் தீர்ப்பாணை செய்யப்படுகிறது.

## செலவு விபரப்பட்டியல்

| | வாதி | பிரதிவாதிகள் |
|---|---|---|
| பிராதில் முத்திரை வில்லை | 76,347 | - |
| வக்காலத்து | 10 | - |
| மொத்தம் | 76,357 | - |

## தபசில்

1. தென்காசி பதிவு மாவட்டம், சிவகிரி சார்பதிவகம், விஸ்வநாதப்பேரி கிராமம் பாகம் 1 பெரியகுளம்புறவில் நஞ்சை சர்வே 1150/2ம் நம்பர் ஏக்கர் 2.04 (ஹெக் 0.83.0), நன்செய் சர்வே 1174/1 நம்பர் ஏக்கர் 2.06 (ஹெக் 0.84.0) ஆக ஏக்கர் 4.10ல் தென்புறம் ஏக்கர் 2.05ம் (ஹெக் 0.83.0) மால் :-

| | | |
|---|---|---|
| மனோகரன் நாயுடு வகையறா நஞ்சைக்கும் | - | வடக்கு |
| ஆழங்கால் வாய்க்காலுக்கும் | - | தெற்கு |

சந்தான திலகம் நஞ்சைக்கும் - மேற்கு

ஜெயச்சந்திரன் நாயுடு நஞ்சைக்கும் -வடக்கு

இதற்குள்பட்டதும் மேற்படி சர்வே 1150/2 நம்பரிலிருக்கிற கல்கட்டு கிணர் ஜலம் ரூம், எஸ்சி 128ம் நம்பர் 5 ஹெச்பி மோட்டார் பம்ப் செட் வாய்க்கால் பாதை வகையறாவில் பிரிவின்றி பாதிப் பாத்தியமும், மேற்படி குமரேசன் நஞ்சையில் மேல்புறமாக 5 லிங்ஸ் அகலத்தில் போடப்பட்ட தென்வடல் வாய்க்கால் மூலம் குளத்து தண்ணீர் பாய்ச்சி கொள்ளும் பாத்தியமும் இவ்வாய்க்கால் வழியே குமரேசன் நஞ்சையில் உள்ள கழிவு நீரை ஆழங்காலில் கொண்டு வரும் பாத்தியமும் மற்றும் மாமூலான சகல சர்வே பாத்தியங்கள்உட்படவும்,

2. மேற்படி கிராமம், பாகம் 1ல் பெரியகுளம்புறவில் நஞ்சை சர்வே 1151/2 நம்பர் ஏக்கர் 6.24ல் மேல் கடைசியில் ஏக்கர் 1.56-ல் தென்புறம் செண்ட் 78ம் (ஹெக் 0.31.5) இது யூ.டி.ஆர் படி சர்வே 1151/2பி நிர் ஹெக் 1.90.0ல் மேல் கடைசியில் ஹெக் 0.63.0ல் தென்புறம் மேற்படி ஹெக் 0.31.5ம் மால்

11ம் நம்பர் ரோட்டுக்கும் - கிழக்கு

அய்யாச்சாமி நஞ்சைக்கும் - தெற்கு, மேற்கு

ஜெயச்சந்திர நாயுடு நஞ்சைக்கும் - வடக்கு

இதற்குள்பட்டதும் சர்வே 1151/2ஏ நிர் ஹெக் 0.02.0ல் இருக்கிற சதுர கல்கட்டு கிணறு ஜலம் ரூம் 3 ஹெச்பி மின் மோட்டார் பம்பு செட் வாய்க்கால் பாதை வகையறாவில் பிரிவின்றி பாதியில் மேற்படி நஞ்சைக்குரிய விகிதாச்சார பாத்தியமும், கண்ணாற்று வாய்க்காலில் இருந்து குமரேசன் கைவச நஞ்சையில் மேல்புறமாக உள்ள மேற்படி 5 லிங்ஸ் அகல தென்வடல் வாய்க்கால் மூலம் தபசில் இடத்திற்கும், குமரேசனுக்கும் உள்ள நஞ்சையில் மையமாக செல்லும் மாமூல் வாய்க்கால் மூலம் கிணற்று தண்ணீர் குளத்துத் தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளும் பாத்தியமும்,

3. மேற்படி குளம்புறவில் நஞ்சை சர்வே 1153/1 நம்பர் ஏக்.1.78ல் மேல்புறம்

.

சின்னம்மாள் நஞ்சைக்கும் - கிழக்கு

கண்ணாற்று வாய்க்காலுக்கும் - தெற்கு

செல்வகணேசன், குருசாமி ஆசாரி

இவர்கள் நஞ்சைக்கும் - மேற்கு

மேற்படி குருசாமி ஆசாரி நஞ்சைக்கும், செல்வராணி நஞ்சைக்கும் - வடக்கு இதற்குள் ஏக் 1 செ 1/2ம் இவை யூ.டி.ஆர்.படி சர்வே 1153/1 நம்பர் ஹெக் 0.72.0ல் அடங்கியதும், மேற்படி நம்பரிலிருக்கிற கல்கட்டு கிணறு ஜலம் வாய்க்கால் பாதை வகையறாவில் 2ல் 1 பங்கு பாத்தியமும் மற்றும் மேற்படி நஞ்சைக்குரிய மாமூலான களப்பாசன வாய்க்கால் வழி தண்ணீர் பாத்தியமும் சரி.

2021-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10-ம் நாள் ஆகிய இன்று என்கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒ/ம்.கோ.அனுராதா),**
கூடுதல் மாவட்ட நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
தென்காசி.

Additional District Court,
Tenkasi
O.S.No.194/2020
Decree
Date: 10.08.2021